**தலைப்பு 328 - மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 328 - மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 ஒக்டோபர் 16 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதிஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 364.15 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 360.57 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 3.58 மில்லியன் அதாவது 0.98 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 330.45 | 328.83 | 1.62 | 0.49 |
| மூலதனம் | 33.70 | 31.74 | 1.96 | 5.82 |
| மொத்தம் | 364.15 | 360.57 | 3.58 | 0.98 |

**2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 32801 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 18.00 | 11.97 | 9.00 | 10.87 | 59.00 | 39.07 |

**2.3 கட்டுநிதி கணக்கு**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் கீழான 7002/0000/0424/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 27,500 ஆக இருந்தது.

**2.4 பொது வைப்புக் கணக்கு**

2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திணைக்களத்தின் கீழான 02 வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 290,953 ஆக இருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| வைப்புக் கணக்கின் இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0011/0013/0091/0000 | 246,653 |
| 6000/0000/00/0011/0018/0089/0000 | 44,300 |
| மொத்தம் | 290,953 |

**2.5 கணக்காய்வு அவதானிப்பு**

மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 புத்தகங்களும் பதிவேடுகளும் பேணப்படாமை

2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 08 செலவின விடயங்களுக்கு மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டமையால் நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அச்செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டின் 11 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சிளவினைக் கொண்டிருந்தது.

(ஆ) ஒரு விடயத்திற்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் முழு நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

### 3.3 கட்டுநிதி கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 371(2)(அ), (ஆ) பிரகாரம் செயல்நிமித்த கட்டுநிதி வழங்கப்பட்ட செயற்பாடு நிறைவு பெற்றவுடன் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத கட்டுநிதி ரூபா 27,500 ஆக இருந்தன.

(ஆ) கட்டுநிதி தீர்ப்பனவின் போது நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் செய்யப்பட வேண்டிய போதிலும் 06 சந்தர்ப்பங்களின் போது ரூபா 61,400 கூட்டுத்தொகையான முற்பணங்களை தீர்வு செய்தல் 02 மாதங்கள் முதல் 12 மாத காலதாமதத்துடன் இடம் பெற்றிருந்தது.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2016 ஒக்தோபர் 20 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக இருப்பு பரிசோதனையின் போது அத்திகதியில் இருப்பு மற்றும் இருப்பு பதிவேட்டு மீதிகளுக்கிடையே இணக்கமின்மை வெளிப்படுத்தப்பட்டன. அதன் பிரகாரம் ரூபா 345,669 பெறுமதியான சஞ்சிகைகள் மற்றும் ரூபா 13,492 ஆன புத்தகங்கள் குறைவாகவும் ரூபா 89,538 பெறுமதியான 1.114 பிரதிகள் கூடுதலாக காணப்பட்டன.

**3.5 செயலாற்றல்**

-----------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**1. தொழில் வடிவமைப்பு, மேம்பாடு மற்றும் தொழில்துறை வழிகாட்டி பிரிவு**

**(அ) ஊழியச் சந்தை தகவல் பிரிவு**

சர்வதேச ஊழியச் சந்தை வலையமைப்பில் இலங்கை பங்குதாரராக செயற்திறனான மற்றும் வினைத்திறனை தீர்மானங்களை எடுப்பதற்கும் கொள்கைகளை தயாரிப்பதற்கும் தேவையான ஊழியச் சந்தை தகவல்களை தேவையான தரப்பினர்களுக்கு வழங்கும் நோக்கில் இப் பிரிவு தாபிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இப் பிரிவிற்குச் சொந்தமாக உழைப்புச்சந்தை போக்கு பகுப்பாய்வு செய்யக் கூடிய அதற்காக மிகவும் பயிற்சி பெற்ற நிபுணத்துவ ஊழிய அணியொன்று இல்லாமை காரணமாக ஊழியச் சந்தை போன்ற அடிக்கடி மாற்றங்களுக்கு உட்படும் சந்தையொன்று தொடர்பான தேசிய பொருளாதாரத்தை தீர்மானிப்பதற்கு முக்கியமான தகவல்கள் கால ரீதியாக வழங்கும் இயலுமை திணைக்களத்திடம் காணப்படவில்லை.

**(ஆ) கல்வித்துறையின் தொழில் சுயவிபரம் (Job Profile)**

திணைக்களத்தினால் இலங்கை கல்வித்துறையின் தொழில்களுக்காக நிபுணத்துவம் பொருந்தாமை தொடர்பான ஆய்வின் போது தெரிவு செய்யப்பட்ட பல நிறுவனங்களுக்கு இப்பிரிவினால் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட வினாக்கொத்துகளுக்கு கிடைத்த தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அறிக்கை தயாரித்தல் இடம்பெறுகின்றது. ஆய்வின் இறுதியின் போது அதற்குரிய புத்தகமும் அச்சிடப்பட்டு பிரதேச செயலகங்களுக்கும் தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கு பகிர்ந்தளித்தல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது. அதனூடாக கல்வித்துறையில் உழைப்புக் கேள்வி மற்றும் உழைப்பு வழங்கல் என்பவற்றிற்கு இடையே இணக்கமின்மை இனங்காண்பதற்கும் அதற்கு தீர்வொன்றாக தயாரிக்கப்பட்டுள்ள தந்திரோபாயமொன்று தயாரிப்பதற்கு ஏதேனும் பங்களிப்பொன்று செய்யப்பட்டுள்ளதா என்பது சிக்கலொன்றாக இருந்தது.

**(இ) பொது தொழில் சேவை நிலையங்கள (PES) செயலாற்றல் பரிசோதனை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பொதுத் தொழில் சேவை நிலையங்களுக்கு நேரடியாக வந்து மற்றும் இணையத்தளத்திற்கு நுழைந்து தொழில் விண்ணப்பதாரிகளாக பதிவு செய்ய முடியமாக இருப்பதுடன் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்காக பதிவு செய்த தொழில் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை முறையே 43,390 மற்றும் 51,489 ஆக இருந்தன. எனினும் பதிவு செய்யப்பட்ட தொழில் வழங்குனர்கள் மற்றும் அவர்களால் வழங்கப்பட்ட தொழில் வெற்றிடங்களின் அளவு குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையால் 2015 மற்றும் 2016 ஆண்டுக்காக தொழிலில் ஈடுபடுத்துதல் முறையே 10 சதவீதத்திற்கு 11 சதவீத்திற்கும் இடைப்பட்டிருந்தது.

(ii) பொது தொழில் நிலையங்களில் பதிவு செய்த தொழில் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையில் தொழிலில் ஈடுபடுத்தப்படாத

விண்ணப்பதாரிகள் தொடர்ந்தும் தொழில் வழிகாட்டல்களுக்கும் பயிற்சி நிறுவனங்களுக்கு தொடர்புபடுத்தவததும் இந்த நிலையங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் பிரகாரம் தொழிலில் ஈடுபடுத்தப்படாத தொழில் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் முறையே 36,509 மற்றும் 42,580 ஆக இருந்தது. 2016 ஆம் ஆண்டின்போது இந்த தொழில் ஈடுபடுத்தாத விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை பதிவு செய்த தொழில் எதிர்பார்த்த விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையில் 83 சதவீதமாக இருந்தது.

**II தொழில் விண்ணப்பதாரிகளை தொழிலில் ஈடுபடுத்துதல்**

2010 பெப்ரவரி 02 ஆந் திகதிய 1640/31 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானிப்பத்திரத்தின் மூலம் 2010 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து செயற்படுத்தப்படும் நாட்டின் ஒட்டு மொத்த மனித வளங்களின் மேம்பாட்டினை நோக்கி பலமான தொழில்துறையாளர்களை உருவாக்கும் நோக்கு மனிதவலு வேலை வாய்ப்புத் திணைக்களம் தாபிக்கப்பட்டிருந்தது. தொழில் வடிவமைப்பு, மேம்படுத்தல் மற்றும் தொழில் வழிகாட்டல் போன்ற வெவ்வேறான செயற்பாடுகள் மூலம் தொழிலின்மையை குறைத்தல் இத்திணைக்களத்தின பிரதான இலக்காக இருந்ததுடன 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் திணைக்களத்தினால் தொழிலில் ஈடுபடுத்தல் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **தொழிலில் ஈடுபடுத்தல்** | **தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை** | |
|---|---|---|
| | 2016 | 2015 |
| பொது தொழில் நிலையங்கள் (PES) மூலம் | 6,089 | 4,437 |
| பிரதேச மட்டத்தில் தொழிலில் ஈடுபடுத்தல் | 8,085 | 4,238 |
| மொத்த தொழிலில் ஈடுபடுத்தல் எண்ணிக்கை | 14,174 | 8,675 |
| தொழில் தருனர்களால் தொழிலில் ஈடுபடுத்தல் எண்ணிக்கை சதவீதமாக | 4 | 2 |

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) தொழிலின்மை சனத்தொகைக்கு ஒப்பாக திணைக்களத்தினால் தொழிலில் ஈடுபடுத்தும் சதவீதம் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் முறையே 2 சதவீதம் மற்றும் 4 சதவீதமாக இருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்தினால் இலங்கையின் தொழில் இன்மையை குறைப்பதற்கு இத்திணைக்களம் காண்பிக்கப்பட்டுள்ள பங்களிப்பு திருப்திகரமாக காணப்படவில்லை.

(ஆ) இலங்கை தொழிலின்மை விகிதம் பகுப்பாய்வின் போது செய்யும் பெண்கள் தொழிலின்மை மிகவும் உயர் மட்டத்தில் காணப்பட்டது. இது தொடர்பான தரவுகள் கீழே காட்டப்பட்டுள்ளது (ஊழியப் படையணியின் சதவீதமாக)

| ஆண்டு | தொழிலின்மை விகிதம் | | |
|---|---|---|---|
| | மொத்தம் | பெண்கள் | ஆண்கள் |
| **2014** | 4.3 | 6.5 | 3.1 |
| **2015** | 4.6 | 7.6 | 3.0 |
| **2016** | 4.4 | 7.0 | 2.9 |

பெண்கள் தொழிலின்மையை குறைப்பதற்காக அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட விஷேட நிகழ்ச்சித்திட்டங்கள செயற்படுத்தப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக எந்தவொரு தந்திரோபாய திட்டமொன்றும் திணைக்களத்திடம் காணப்படவில்லை. பெண்களை இலக்காக கொண்டு அவர்களின் தொழிலின்மையை குறைக்கும் நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துதல் தேசிய ரீதியான முக்கியமான விடயமொன்றாக இருக்கையில் திணைக்களம் அது தொடர்பாக கவனம் செலுத்தாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 3.6 நட்டங்களும் சேதங்களும்

திணைக்களத்திற்குச் சொந்தமான கெப் வண்டி மீளாய்வாண்டின்போது விபத்துக்குட்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் 104(4) இன் பிரகாரம் ஆரம்ப மற்றும் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. புதிதாக திருத்தங்களுக்காக ரூபா 26,300 தொகை திணைக்களம் செலவிடப்பட்டிருந்த போதிலும் குறித்த காப்புறுதி நிறுவனம் அத்தொகையை மீள்நிரப்பிலிருக்கவில்லை. நட்டமான அப்பெறுமதி ஒதுக்கீட்டுக் கணக்கில் அறிக்கையிட்டிருக்கவில்லை.

## 3.7 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 13 | 09 | 04 |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | - | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 673 | 538 | 135 |
| (iv) | ஆரம்ப நிலை | 15 | 11 | 04 |
| | **மொத்தம்** | **703** | **558** | **145** |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

மீளாய்வாண்டின் இறுதி வரையில் திணைக்களத்தில் சிரேஷ்ட மட்டத்தில் 04 வெற்றிடங்களும், மூன்றாம் நிலையில் 02 வெற்றிடங்களும், இரண்டாம் நிலையில் 135 வெற்றிடங்களும் ஆரம்ப நிலையில் 04 வெற்றிடங்களுமாக மொத்தம் 145 வெற்றிடங்கள் காணப்பட்டன. திணைக்களத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக சுழற்சியான பங்களிப்பு பெற்றுக்கொள்ளப்படும் தந்திரோபாயமாக முக்கியமான வெற்றிடங்கள் நிரப்புவதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது.